இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்பு திட்டம் 2006
தொடர் மதிப்பீட்டு பரீட்சை - 1 மட்டம் 3
LWU 1411 – இலங்கை சட்டங்களுக்கான அறிமுகம்
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 05.09.2006 நேரம்: மு.ப 10.00 - மு.ப 10.40

ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. 'பிரித்தானிய ஆட்சியாளர்களுடைய ஆரம்ப கால கொள்கையானது தமது சட்டங்களை உள்ளூர் வாசிகளுக்கு பயன்படுத்துவதோடு அவர்கள் டச்சுக்கால காலப்பகுதியின் போது ஆக்கப்பட்ட டச்சு நியதிச்சட்டங்களுக்கு பயன்கொடுக்க விரும்பவில்லை.'

   இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உமது விடைக்குரிய காரணங்களை தருக.

2. பாலா 1976ஆம் ஆண்டு திருகோணமலையில் தமிழ் பெற்றோருக்கு பிறந்தான். அவனுடைய ஏழு வயதில் அவனுடைய பெற்றோர் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்தனர். அவன் பாடசாலை கல்வியை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொண்டான். பாலா 18 வயதில் பாடசாலையை விட்டு விலகி கண்டியில் இருந்த தனது மாமனாரின் உணவகத்தில் வேலைக்கு சேர்ந்தான். அதே உணவகத்தில் வரவேற்பாளர்ராக பணி புரிந்த கீதா என்ற பெண்ணை 1998ஆம் ஆண்டு பாலா திருமணம் முடித்தான். திருமணத்தின் பின்பு கீதாவினுடைய பெற்றோரில் கொடையளிக்கப்பட்ட கண்டியில் இருந்த வீட்டில் வாழ்ந்தனர். பாலா யாழ்ப்பாணத்தில் இருந்த தனது பெற்றோருக்கு கிரமமாக பணம் அனுப்பினான். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பெற்றோரை சென்று பார்த்து வருவான். தனது உழைப்பில் இருந்து பெற்றுக்கொண்ட வருமானத்தின் ஒரு பகுதியை யாழ்ப்பாணத்தில் இருந்த நிதிக் கம்பனியொன்றில் முதலீடு செய்தான். 2000ஆம் ஆண்டு பாலா யாழ்ப்பாணத்தில் புதிய வீடொன்றை வாங்கி அண்மையில் தான் நிரந்தரமாக யாழ்ப்பாணத்தில் வசிப்பிடத்தை அமைத்துக்கொள்ளும் வரை தனது பெற்றோரை புதிய வீட்டில் வசிக்குமாறு வேண்டிக்கொண்டான்.

   கணவன், மனைவி இருவரக்குமிடையில் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. 2001ஆம் ஆண்டு பாலா மனைவியை விட்டு யாழ்ப்பாணத்திற்கு சென்று தனது பெற்றோருடன் வாழ்ந்து வந்தான். கீதா தொடர்ந்து கண்டியில் இருந்த திருமண இல்லத்தில் வசித்து வந்தாள். 2002ஆம் ஆண்டு பாலா புதிய கட்டிடம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் வாங்கி புதிய உணவகம் ஒன்றை ஆரம்பித்தான். பாலா திடீரென 2005ஆம் ஆணடு இறந்தான்.

   பாலாவுக்கு எந்த சட்டம் பிரயோகிக்கப்படும் என்பதை தெரிந்து கொள்ள அவனது பெற்றோர் விரும்புகின்றனர். அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

(பதிப்புரிமை பெற்றது)